செ.வெ.எண் : 13/ மார்ச் நாள் : 08.03.2021

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021-ல் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து ஒதுக்கீடு செய்வதற்கான கணினி முறை ஒதுக்கீடு (Computerized Randomization)

**மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (08.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021ல் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து ஒதுக்கீடு செய்வதற்கான முதற்கட்ட கணினி முறை ஒதுக்கீடு (Computerized First Randomization) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப.,, அவர்கள் தெரிவித்ததாவது:

சட்டமன்ற பொதுத்தேர்தல்- 2021 பணிகளுக்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளில் பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் 357 வாக்குச்சாவடி மையங்களும், திருவாடானை சட்டமன்ற தொகுதியில் 417 வாக்குச்சாவடி மையங்களும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் 431 வாக்குச்சாவடி மையங்களும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 442 வாக்குச்சாவடி மையங்களும் என மொத்தம் 1647 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுகின்றன. அதேபோல, முதல்நிலை பரிசோதனை நிறைவேற்றப்பட்டு, 3,206 வாக்குச் செலுத்தும் இயந்திரங்களும் (Ballot Unit), 1,966 வாக்குப்பதிவு இயந்திரங்களும் (Control Unit), 2,232 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும் (VVPAT) இராமநாதபுரம் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைகூட சேமிப்பு கிட்டங்கி பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று பயன்படுத்துவதற்காக, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ள கணக்கீட்டின்படி, வாக்குச்சாவடி மையங்களின் எண்ணிக்கையிலிருந்து, வாக்குச்செலுத்தும் இயந்திரங்கள் (Ballot Unit) 20 சதவிதமும், வாக்குப்பதிவு இயந்திரம் (Control Unit) 20 சதவிதமும், வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரம் (VVPAT) 30 சதவிதமும் கூடுதலாக கையிருப்பு (Reserve) இருக்கும் வகையில் கணினி முறை ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

அதன்படி, பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு 429 வாக்குச்செலுத்தும் கருவிகளும், 429 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 465 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கு 501 வாக்குச்செலுத்தும் கருவிகளும், 501 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 543 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கு 518 வாக்குச்செலுத்தும் கருவிகளும், 518 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 561 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு 531 வாக்குச்செலுத்தும் கருவிகளும், 531 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 575 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும் தேவை என கணக்கிடப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முறையே இராமநாதபுரம் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைகூட சேமிப்பு கிட்டங்கி பாதுகாப்பு அறையிலிருந்து ஆயுதமேந்திய காவல் பாதுகாப்புடன் அந்தந்த சட்டமன்ற தொகுதியில் தேர்வு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளில் வைக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப.,, அவர்கள் தெரிவித்ததார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.ஆர்.பழனிகுமார், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பொறுப்பு அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு.சி.ரவிச்சந்திரன், தனி வட்டாட்சியர் (தேர்தல்) திரு.பொன்.கார்த்திகேயன் உட்பட அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**